**செய்தி வெளியீடு எண்: 822** **நாள்: 09.11.2018**

## செய்தி வெளியீடு

### உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில்
### உதவித் தொகையுடன்
### தமிழ்ச் சுவடியியல் (ம) பதிப்பியல் ஓராண்டு பட்டயப் படிப்பு

மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழின் தொன்மையை, பண்பாட்டைத் தன்னகத்துள் கொண்டிலங்கும் ஓலைச்சுவடிகள், கேட்பாரற்று அழிந்துகொண்டிருக்கும் சூழலைக் கருத்தில் கொண்டு 2014ஆம் ஆண்டு சென்னை, தரமணியில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ரூ. 34 இலட்சத்தில் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம் ஒன்றினை நவீன வசதிகளுடன் தொடங்கினார்கள்.

இந்நிறுவனத்தால் இதுவரை பலநூறு ஓலைச்சுவடிகள் கண்டெடுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பாதுகாக்கப்பட்டு வரும் ஓலைச்சுவடிகளை அறிந்து தெரிந்து கொண்டு நூலாக்கம் செய்யும் வகையில் தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் படிப்பும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 2013 முதல் தொடங்கப்பட்டு சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் மேலான ஆணையின்படி பட்டயப் படிப்பினை ஆர்வத்தோடு பயிலும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தேர்வின் அடிப்படையில் ஓராண்டுக்கு பத்து மாணவர்களுக்கு திங்கள் தோறும் ரூ. 3000 வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டுவருகிறது. இப்பட்டய படிப்புக்கான விண்ணப்பத்தினை நிறுவன வலைத்தளத்தில் (ulakaththamizh.org) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதற்கான எழுத்துத் தேர்வு 17.12.2018 அன்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடைபெறும்.

இப்பயிற்சிக்கான சேர்க்கைக் கட்டணம் ரூ. 2000 ஆகும். இப்பயிற்சிக்கான கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயதுவரம்பு கிடையாது. விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 2018 திசம்பர் 10ஆம் தேதி ஆகும். வகுப்புகள் 2019 சனவரி 2ஆம் தேதி முதல் தொடங்கும். மேலும்

தகவல்பெற இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத்தொழில் நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை – 600113 (தொலைபேசி – 044–22542992, 22540087) என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**